[18th February 1961

தெரிந்துகொண்டிருக்கவேண்டும் (சிரிப்பு). கனம் முதல் அமைச்சர் சொல்லுவது போல, கனம் அங்கத்தினரே ஒரு பத்திரிகையை நடத்துகிறார். அவர் ஏன் கையினால் செய்த பேப்பரை உபயோகிக்கக்கூடாது என்று முதல் அமைச்சர் சொல்லுகிறார்கள். நியூஸ்பிரிண்ட் கையினால் செய்யக்கூடியது அல்ல. அது மிகவும் நுட்பமான ஒரு தொழில் அதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் இங்கே கிடைக்கவில்லை. ஒரு வேளை பின்னர், புளுகம், வாட்டில் இவைகளை உபயோகித்து ரிசெர்ச்சு மூலமாகச் செய்யமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டால், சர்க்கார் வேண்டிய உதவிசெய்யும்.

SRI N. K. PALANISAMI : கரும்புச் சக்கையை உபயோகித்து 200 டன் நியூஸ்பிரிண்ட் செய்வதற்கு ஒரு லைசென்ஸ் கோரி ஏதாவது ஒரு கம்பெனி சர்க்காருக்கு மனுக் கொடுத்திருக்கிறதா? சர்க்கார் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : கரும்புச் சக்கையை வைத்துக்கொண்டு நியூஸ்பிரிண்ட் செய்யமுடியாது, எழுதும் பேப்பர்தான் செய்ய முடியும்.

SRI P. S. K. LAKSHMIPATHIRAJ : மதுரை மாவட்டத்திலே காகித ஆலை ஒன்று நிறுவுவதற்கு மனுச் செய்திருக்கிறார்களே, அதன் முடிவு என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு லைசென்ஸ் ரொம்ப நாட்களாகத் தூங்கிக் கொண்டிருக்கிறது.

Fertilizer distribution

* 367 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட உர விநியோக விசாரணைக் குழுவின் அறிக்கை மாநில சர்க்காருக்கு கிடைத்ததா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) A statement [a] showing the conclusions and recommendations of the Fertilizer Distribution Enquiry Committee is placed on the table of the House.

---

a Printed as Appendix I on pages 79–88 infra.

18th February 1961]

SRI S. M. ANNAMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்விக்குப் பதில் பத்து பக்கங்கள் இருக்கின்றன. ஆகவே நாளைக்கு எடுத்துக்கொள்ளலாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மேஜை மீது இருக்கிற பேப்பர் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் சொல்லமுடியும்.

MR. SPEAKER : இன்னொன்று நாளைக்கு எடுத்துக்கொண்டாலும் இதே பதிலைத்தான் மந்திரி அவர்கள் கொடுக்கமுடியும்.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது பெர்ட்டிலைசர் பற்றுக்குறை ஏராளமாக இருக்கிறது. கமிட்டி சொல்லக்கூடிய பிரகாரம் பல ஏஜென்சிகள் "அன்பாப்புலர்" மிக்சர்களையும், பெர்ட்டிலைசர்களையும் உபயோகிப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அமோனியம் சல்பேட் உரம் கேட்கும்பொழுது "அன்-பாப்புலர்" பெர்ட்டிலைசர்களையும், மிக்சர்களையும் சேர்த்துக் கொடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மோனியம் சல்பேட் கேட்கிறபொழுது, வேறு எதையும் சேர்த்துக் கொடுப்பது சரியல்ல. கூடியவரை விவசாயிகள் எது எது வேண்டுமென்று சொல்லுகிறார்களோ, அதை வரவழைத்துக் கொடுப்பதுதான் நியாயம் என்று சர்க்கார் கருதுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Government tell us whether they would be prepared to place the decisions on the table of the House, when they decide this question finally?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would suggest to the hon. Member to put a separate question. In the meanwhile when this is being examined, if a separate question is put answers will be given.

SRI N. K. PALANISAMI : அம்மோனியம் சல்பேட்டுக்குப் போடப்பட்டிருக்கிற விற்பனை வரியைக் கொஞ்சம் குறைத்தால் அதன் விலை கொஞ்சம் குறைவாக ஆகும், என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியானால் அதன் பிரகாரம் அம்மோனியம் சல்பேட்டுக்கும் போடப்பட்டிருக்கிற விற்பனை வரியை ரத்து செய்வதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ? 10-30 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போதைய பிரச்னை அம்மோனியம் சல்பேட்டின் விலையைக் குறைக்கவேண்டும் என்பது அல்ல. அது கிடைக்கவில்லை என்பதுதான். விலை அதிகம் என்பதைப்பற்றி அல்ல.

Overbridges

* 368 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras have asked for a loan from this Government for the construction of two overbridges, one